**செய்தி வெளியீடு எண்: 121/2023** **நாள்: 27.10.2023**

## பத்திரிக்கைச் செய்தி

### பயணிகள் அவசரகால இண்டர்காம் (Passenger Emergency Intercoms - PEI) வசதி

சென்னை மெட்ரோ இரயில்களில், பயணிகள் அவசரகால இண்டர்காம் (Passenger Emergency Intercoms - PEI) வசதி வழங்கப்பட்டுள்ளது, பயணிகள் அவசரகால சூழ்நிலையில் மெட்ரோ இரயில்களில் வைக்கப்பட்டுள்ள அவசரகால இண்டர்காம் மூலம் மெட்ரோ இரயில் ஓட்டுநரை தொடர்பு கொள்ளலாம். 4 பெட்டிகளை கொண்டு தற்போது இயக்கப்பட்டு வரும் ஒவ்வொரு மெட்ரோ இரயில்களிலும் 10 அவசரகால இண்டர்காம்கள் பொருத்தப்பட்டுள்ளது. பெண் பயணிகள் உட்பட அனைத்து பயணிகளுக்கும் இந்த வசதி உள்ளது.

25.10.2023 அன்று வெளிவந்த செய்தியில், பெண் பயணிகளுக்காக வழங்கப்படும் பயணிகள் அவசரகால இண்டர்காம்களின் எண்ணிக்கை தவறாக 4 என கூறப்பட்டிருந்தது. அதுமட்டுமின்றி கடந்த 4 மாதங்களில் 12,000 பெண் பயணிகள் இந்த வசதியைப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தகவலும் ஆதாரமற்றது. அனைத்து பயணிகள் அவசரகால இண்டர்காம் பதிவுகளும் இரயில் கட்டுப்பாட்டு மேலாண்மை அமைப்பிலிருந்து எடுக்கப்படுகின்றன மற்றும் பொத்தானை அழுத்தும் பதிவுகள் ஏதும் கிடைக்கவில்லை. எனவே இது முற்றிலும் ஆதாரமற்றது என சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துக்கொள்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**